# தக்காளி சாகுபடியில் வெற்றி பெற்ற விவசாயி

தருமபுரி மாவட்டம் காய்கறி பயிர்கள் அதிகம் பயிரிடப்படுகின்ற ஒரு மாவட்டம் ஆகும். தக்காளி காய்கறி பயிர்களில் ஒரு முக்கியமான பயிர் ஆகும். இது தருமபுரி மாவட்டத்தில் சுமார் 3950 எக்டர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றது. தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் எர்ரணஹள்ளி கிராமத்தைச் சார்ந்த விவசாயி திரு.குமார் தக்காளி சாகுபடி செய்து வெற்றி கண்டுள்ளார். அவர் பின்பற்றிய தொழில்நுட்பங்கள் பின்வருமாறு.

**இரகம்** : சிவம்

**பருவம்** : டிசம்பர் - ஜனவரி மற்றும் மே–ஜுன் மேற்கண்ட பருவங்கள் மட்டுமல்லாமல் வருடம் முழுவதும் தண்ணீர் இருப்பை பொறுத்துஆண்டு முழுவதும் பயிரிடப்படுகின்றது

**நடவு**

நிலத்தை நன்கு உழவு செய்தேன் பின்பு நான்குஅடிஅகலத்திற்கு மேட்டுப்பாத்தி அமைத்தேன் அதன் நடுவில் சொட்டு நீர் பாசன குழாய்களை அமைத்தேன். வரிசைக்கு வரிசை மற்றும் செடிக்கு செடி 2 அடி என்ற இடைவெளியில் 25 நாள் வயதுடைய நாற்றுக்களை நடவு செய்தேன். ஒரு ஏக்கருக்கு 9000 நாற்றுக்கள் தேவைப்பட்டது. நடவுக்கு முன்பு சூடோமோனாஸ் ஃபுளோரசன்ஸ் கரைசலில் நாற்றுக்களை நனைத்து பின்பு நடவு செய்தேன்.

**அடியுரம்**

ஏக்கருக்கு 10 டன் தொழுஉரம் மற்றும் 200 கிலோசூப்பர் பாஸ்பேட் அடியுரமாக இடப்பட்டது.

**நீர்வழிஉரம்**

வேளாண்மை அறிவியல் நிலையம், பாப்பாரப்பட்டியின் பரிந்துரையின் படி 19: 19 : 19, 13: 0: 45 மற்றும் யூரியா ஆகியவற்றை முறையே 75 கிலோ 150 கிலோ மற்றும் 70 கிலோ ஆகியவற்றை நீர்வழி உரமாக அளித்தேன்.

**குச்சிகட்டுதல்**

தக்காளியில் பார்கள் அதிகமாக இருப்பதால் பயிர் படர்வதை சுலபமான முறையில் மேலாண்மை செய்யவேண்டும். சவுக்கு குச்சிகளை பயிர வளர்ச்சிக்கு இணையாக 6 அடிக்கு ஒன்று என்றளவில் நட வேண்டும். அதில் தரையிலிருந்து 4 ½ அடி உயரத்தில் கம்பி கட்ட வேண்டும். பின்பு நடவு செய்த 40 – 50 வதுநாள் சணலை கொண்டு செடியின் தண்டினை சேர்த்து கம்பியில் கட்ட வேண்டும். இதனால் செடிகள் மண்ணில் படுவது தடுக்கப்படுகிறது. இரண்டு அல்லது மூன்று முறை உயர்த்திக் கட்டவேண்டும். இதனால் தக்காளி பூ மற்றும் காய்கள் மண்ணில் பட்டு நோய் உண்டாவது தவிர்க்கப்படுகின்றது.

**அறுவடை**

நடவு செய்து சுமார் 70 – 75 வது நாளில் அறுவடையை துவக்கலாம். பழங்களை தரம் பிரித்து கிரேட்டுகளில் நிரப்பி சந்தைக்கு அனுப்பலாம். நடவு செய்த 9வது மாதம் வரை அறுவடை செய்யலாம்.

**வரவுசெலவு**

| **விவரம்** | **ஏக்கருக்கு (ரூ)** |
|---|---|
| உழவு | 5000 |
| பார் அமைத்தல் | 2500 |
| தொழுஉரம் | 15000 |
| நாற்றுநடவு செலவு | 3000 |
| உரம் | 7500 |
| குச்சிகட்டுதல் | 5000 |
| பயிர் பாதுகாப்பு | 6000 |
| அறுவடை | 19500 |
| **மொத்தம்** | **63500** |

| | |
|---|---|
| மகசூல் | 2 டன் |
| வரவு | 184000 |
| நிகர இலாபம் | 120500 |

தக்காளி சாகுபடி செய்வதால் ஒரு ஏக்கரில் சுமார் ஒரு இலட்சம் வரை வருமானம் பெறலாம். எனவே மற்ற விவசாயிகளும் இதை பின்பற்றி நன்மையடையலாம்.

